கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

எதிரி தரப்பு 1 வது சாட்சி (எ.த.சா.1)

STC No.19 /2023

| | |
|---|---|
| பெயர் | -தேவிபகவதி |
| க/பெ | -சுரேஷ்குமார் |
| கிராமம் | - |
| தாலுகா | - |
| தொழில் | - |
| ஜாதி | - |
| மதம் | - |
| வயது | - 40 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் இந்தியன் வங்கி, வள்ளியூர் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 2024 ம் ஆண்டு ஜூன் 10 ம் தேதி முதல் வள்ளியூர், இந்தியன் வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.06 04:28:33 +0530

ம.சா.ஆ.2, மசா.ஆ.3 வங்கி ரிட்டன் மெமோ எனக்கு முன்பு பணிபுரிந்த மேலளாரால் கொடுக்கப்பட்டது. ம.சா.ஆ 2, மசா.ஆ.3 ஆவணங்கள் கைப்பட எழுதப்பட்டு கொடுக்கப்பட்டது. மேற்படி காலகட்டங்களில் இணையதளம் மூலமாகவும் ரிட்டன் மெமோ வழங்குவோம். மேற்படி ஆவணங்கள் வழங்கப்பட்ட சமயத்தில் எங்கள் வங்கியில் கணினி சேவைகள் பாதிக்கப்படவில்லை. ம.சா.ஆ 2, மசா.ஆ.3 ஆவணங்கள் காசோலை கொடுத்தவரின் கணக்கு முடிந்ததாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த கணக்கு எந்த தேதியில் என்ன காரணத்திற்காக முடிக்கப்பட்டது என்ற விபரம் சம்மந்தப்பட்ட தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியை கேட்டால் தான் தெரியும்.

<u>மனுதார்ர தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) ம.சா.ஆ 2, மசா.ஆ.3 ஆவணங்கள் உங்கள் வங்கியால் தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ 2, மசா.ஆ.3 ஆவணங்களை வங்கியால் எழுத்துபூர்வமாகவும் வழங்குவோம் என்று சொன்னால் சரிதான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.06 04:28:14 +0530